பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**20 03 2026 FRIDAY 7.15 AM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு நரேந்திர மோடி, கத்தார் மன்னர் திரு ஷேக் தமிம் பின் ஹமாத் அல்தானியுடன் தொலைபேசி வாயிலாக பேச்சு நடத்தியுள்ளார்.

2. உலகளாவிய சிக்கல்களுக்கு இடையிலும் கடல்சார் வர்த்தகத்தைப் பாதுகாக்க ஒருங்கிணைந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு சர்பானந்த சோனாவால் கூறியுள்ளார்.

3. மேற்கு வங்கத்தில் பிஜேபியும், கேரளத்தில் காங்கிரஸ் கட்சியும் சட்டப் பேரவைத் தேர்தலுக்கான இரண்டாவது வேட்பாளர் பட்டியலை வெளியிட்டுள்ளன.

4. மேற்கு ஆசியாவில் தொடர் தாக்குதல்களை அடுத்து பதற்றம் அதிகரித்துள்ளது.

5. உத்தரப்பிரதேசம், இமாச்சலப் பிரதேசம், பஞ்சாப் உள்ளிட்ட மாநிலங்களின் சில இடங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<>>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி, கத்தார் மன்னர் திரு ஷேக் தமிம் பின் ஹமாத் அல்தானியுடன் தொலைபேசி வாயிலாக பேச்சு நடத்தியுள்ளார்.

இந்த பேச்சுவார்த்தையின்போது ரமலான் வாழ்த்துகளை கத்தார் மன்னருக்கு தெரிவித்ததாக பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

கத்தாரின் எரிசக்தி உள்கட்டமைப்புகள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களுக்கு கண்டனம் தெரிவித்ததாகவும், கத்தாருக்கு இந்தியா துணை நிற்கும் என உறுதி அளித்ததாகவும் அவர் கூறியுள்ளார்.

அங்குள்ள இந்திய சமூகத்தினருக்கு கத்தார் வழங்கிவரும் ஆதரவுக்காக அந்நாட்டு மன்னருக்கு நன்றி தெரிவித்ததாகவும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

மேற்காசிய பகுதியில் அமைதியும், ஸ்திரத்தன்மையும் நிலவ இந்தியா ஆதரவு அளிக்கும் என்று அவரிடம் உறுதி தெரிவித்ததாக திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

<<<<<<>>>>>

உலகளாவிய சிக்கல்களுக்கு இடையிலும் கடல்சார் வர்த்தகத்தைப் பாதுகாக்க ஒருங்கிணைந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக

மத்திய கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு சர்பானந்த சோனாவால் கூறியுள்ளார்.

புதுதில்லியில நேற்று நடைபெற்ற கப்பல் மற்றும் துறைமுகம் சார்ந்த பிரதிநிதிகள் உடனான கலந்தாய்வுக் கூட்டத்தில் பேசிய அவர், மாறிவரும் சூழலுக்கு ஏற்ப, கடல்சார் சரக்கு போக்குவரத்தை திறம்பட மேற்கொள்ள வேண்டியது அவசியம் என்றார்.

வழித்தடங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து தொடர்பான அட்டவணைகளில் மாற்றம் ஏற்படுவதால், சரக்கு போக்குவரத்தில் ஏற்படும் தாமதங்களை குறைப்பதில் கவனம் செலுத்த வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

மேற்காசிய பகுதிகளில் நிலவும் சூழ்நிலைகளால் ஏற்பட்டுள்ள சவால்களை சமாளிப்பதில் நாட்டின் துறைமுகங்கள் சிறப்பாக செயல்பட்டு வருவதாகவும் திரு சர்பானந்த சோனாவால்கூறினார்.

<<<<<<>>>>>>

வாழை விவசாயிகளின் நலன்களில் மத்திய அரசு அதிக அக்கறை கொண்டுள்ளதாக வேளாண் துறை அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் கூறியுள்ளார்.

மகாராஷ்ட்ரா மாநிலம் ஜல்கானில் வாழை விவசாயிகளுடன் நேற்று அவர் கலந்துரையாடினார்.

ஜல்கான் பகுதியில் 200 கோடி ரூபாய் மதிப்பில் வாழை ஊக்குவிப்புத் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஜல்கான் பகுதி வாழை உற்பத்தியின் தலைநகரம் என்று அழைக்கப்படுவதை அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டில் உற்பத்தியாகும் வாழையில் 16 சதவீதம் இப்பகுதியில் உற்பத்தியாவதாக அவர் குறிப்பிட்டார்.

இப்பகுதியில் செயல்படுத்தப்படும் வாழை தொகுப்புத் திட்டத்தில் சிறந்த வேளாண் நடைமுறைகள் பின்பற்றப்படும் என்றும், தரமான கிடங்குகள் அமைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

வாழை உள்ளிட்ட அனைத்து பயிர்களின் விலை ஏற்றத்தாழ்வை குறைப்பதற்கும், விவசாயிகள் நியாயமான விலையை பெறுவதற்கும் மத்திய — மாநில அரசுகள் ஒருங்கிணைந்து செயலாற்ற வேண்டும் என்று திரு சிவ்ராஜ் சிங் சௌகான் வலியுறுத்தினார்.

<<<<<<>>>>>

எரிசக்தித்துறையில் ஒத்துழைப்பை அதிகரிக்க இந்தியாவும் — மலாவியும் முடிவு செய்துள்ளன.

இந்தியா வந்துள்ள மலாவி மின்துறை அமைச்சர் டாக்டர் **Jean Mathanga** புதுதில்லியில் மத்திய மின்துறை அமைச்சர் திரு மனோகர்லாலை நேற்று சந்தித்து பேசினார்.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, மின்துறையில் திட்டமிடல் உள்ளிட்வை குறித்து இரு அமைச்சர்களும் ஆலோசனை நடத்தினர்.

இந்தியாவும் — பிரான்ஸும் இணைந்து தொடங்கிய சர்வதேச சூரியசக்தி கூட்டமைப்பில் மலாவி இணைந்துள்ளதற்கு திரு மனோகர்லால் மகிழ்ச்சி தெரிவித்தார்.

மின்துறையில் தொழில்நுட்ப பரிமாற்றங்களை ஊக்குவிக்கவும், பரஸ்பரம் நலன் சார்ந்த திட்டங்களை செயல்படுத்தவும் இரு அமைச்சர்களும் ஒப்புக்கொண்டனர்.

இந்த சந்திப்பு ஆக்கப்பூர்வமாக அமைந்தது என திரு மனோகர்லால் சமூக வலைதளத்தில் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

ஐக்கிய அரசு எமிரேட்ஸ் வெளியுறவு அமைச்சர் **Reem Al Has-**மியுடன், வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் பேச்சு நடத்தியுள்ளார்.

அங்குள்ள இந்திய சமூகத்தினரின் நலன்களை பாதுகாப்பதற்காக அந்நாட்டு அமைச்சருக்கு நன்றி தெரிவித்ததாக திரு ஜெய்சங்கர் குறிப்பிட்டுள்ளார்.

மேற்காசிய நிலவரம் குறித்து விவாதித்தாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>

இந்தியா — இங்கிலாந்து இடையேயான வர்த்தக ஒத்துழைப்பு அதிகரித்து வருவதாக மத்திய வர்த்தக அமைச்சர் திரு பியூஷ்கோயல் கூறியுள்ளார்.

இந்தியா வந்துள்ள இங்கிலாந்து நாடாளுமன்ற வர்த்தக குழுவின் பிரதிநிதிகளுடன் நேற்று அவர் புதுதில்லியில் ஆலோசனை நடத்தினார்.

இருநாடுகளுக்கும் இடையே ஏற்பட்டுள்ள தடையற்ற வர்த்தக ஒப்பந்தம், வாய்ப்புகளை மேலும் அதிகரிக்கும் என்று அவர் குறிப்பிட்டார்.

இதனிடையே, அமெரிக்காவின் அறிவுசார் சொத்துரிமை பிரிவின் தலைவர் திரு சால்வடோர் அனஸ்தாசி தலைமையிலான குழுவும் திரு பியூஷ்கோயலை நேற்று சந்தித்தது.

அறிவுசார் சொத்துரிமை சட்டங்களை மேம்படுத்துவது, இதில் உலகளாவிய ஒருங்கிணைப்பு மேம்படுத்துவது, வணிகம் செய்வதை எளிதாக்குவது ஆகியவை குறித்து அமெரிக்க குழுவினருடன் ஆலோசனை நடத்தியதாக திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>

சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறும், மேற்குவங்கம், கேரளம் உள்ளிட்ட மாநிலங்களில் அரசியல் நடவடிக்கைகள் தீவிரமடைந்துள்ளன.

மேற்குவங்கத்தில் 111 பேர் அடங்கிய இரண்டாவது வேட்பாளர் பட்டியலை பிஜேபி நேற்றிரவு வெளியிட்டுள்ளது.

இதில் முன்னாள் மத்திய அமைச்சர் திரு நிசித் பிரமாணி உள்ளிட்டோர் வேட்பாளர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.

மேற்குவங்கத்தில் மொத்தமுள்ள **294** சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கு அடுத்த மாதம் **23** மற்றும் **29-**ஆம் தேதிகளில் இரண்டு கட்டங்களாக தேர்தல் நடைபெறவுள்ளது.

இந்நிலையில், பிஜேபி இதுவரை **256** தொகுதிகளுக்கான வேட்பாளர்களை அறிவித்துள்ளது.

கேரளத்தில் காங்கிரஸ் கட்சி இரண்டாவது வேட்பாளர் பட்டியலை வெளியிட்டுள்ளது.

நேற்றிரவு வெளியிடப்பட்ட வேட்பாளர் பட்டியலில் **37** வேட்பாளர்களின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன.

மாநிலத்தில் உள்ள **140** தொகுதிகளில் காங்கிரஸ் கட்சி **92** தொகுதிகளுக்கான வேட்பாளர்களை அறிவித்துள்ளது.

புதுச்சேரியில் தொகுதி பங்கீடு குறித்த பேச்சுவார்த்தை அரசியல் கட்சிகளிடையே தீவிரமடைந்துள்ளது.

தமிழகத்தின் திருச்செந்தூரில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய என் ஆர் காங்கிரஸ் தலைவரும், புதுச்சேரி முதலமைச்சருமான திரு ரெங்கசாமி, பிஜேபி உடன் பேச்சுவார்த்தை நடைபெற்று வருவதாக தெரிவித்தார்.

இதனிடையே, சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய காங்கிரஸ் மேலிடப் பொறுப்பாளர் திரு கிரீஷ் சோடங்கர், புதுச்சேரியில் திமுக — காங்கிரஸ் கூட்டணியில் பேச்சு வார்த்தை சுமூகமாக நடைபெற்று வருவதாக தெரிவித்தார்.

<<<<<>>>>>

மேற்கு ஆசியாவில் தொடர் தாக்குதல்களை அடுத்து பதற்றம் அதிகரித்துள்ளது.

அப்பகுதியில் உள்ள எரிசக்தி கட்டமைப்புகள் மீது தாக்குதல்கள் அதிகரித்துள்ளது.

பொதுமக்கள் மற்றும் உள்கட்டமைப்புகள் மீதான ஈரானின் தாக்குதல்கள் கண்டிக்கத்தக்கது என 12 அரபு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டாக அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

யான்பு துறைமுகத்தின் மீது நடத்தப்பட்ட ஏவுகணை தாக்குதலை முறியடித்துள்ளதாக சவுதி அரேபியா தெரிவித்துள்ளது.

இதனிடையே, இஸ்ரேலியப்படைகள் லெபனானில் தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<>>>>>

மகாராஷ்ட்ராவில் நக்சல் தீவிரவாதிகள் 11 பேர் நேற்று காவல்துறையினரிடம் சரணடைந்தனர்.

கச்சிரோலி மாவட்டத்தில் அவர்கள் சரணடைந்ததாக அம்மாவட்ட காவல்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

சரணடைந்த 11 பேரையும் பிடிக்க உதவுபவர்களுக்கு மொத்தம் 68 லட்சம் ரூபாய் சன்மானம் அறிவிக்கப்பட்டிருந்ததாகவும் காவல்துறை கூறியுள்ளது.

<<<<<<>>>>>>

உத்தரப்பிரதேசம், இமாச்சலப் பிரதேசம், பஞ்சாப் உள்ளிட்ட மாநிலங்களின் சில இடங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

பீகார் மற்றும் உத்தராகண்டின் சில இடங்களிலும் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று அந்த மையம் கூறியுள்ளது.

தலைநகர் தில்லி, நொய்டா, காசியாபாத் பகுதிகளில் நேற்று மாலை மிதமான மழை பெய்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

நாட்டின் கிழக்கு மற்றும் வடமேற்குப் பகுதிகளின் சில இடங்களில் வெப்பநிலை இயல்பைவிட குறையக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஜம்மு காஷ்மீரின் சில இடங்களில் நேற்று கடும் பனிப்பொழிவு நிலவியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>>

உலக உள் அரங்க தடகள சாம்பியன் போட்டி போலந்தில் இன்று தொடங்குகிறது.

மூன்று நாட்கள் நடைபெறும் இப்போட்டியில், பல்வேறு நாடுகளை சேர்ந்த 600-க்கும் மேற்பட்ட வீரர், வீராங்கனைகள் பங்கேற்கின்றனர்.

இதனிடையே. 2028-ஆம் ஆண்டு உலக உள் அரங்க தடகள சாம்பியன் போட்டி இந்தியாவின் புவனேஷ்வரில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா, இணையமைச்சர் திருமதி ரக்ஷா நிஹில் கட்சே ஆகியோர் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

----------

இந்திய ஓபன் ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் அபய் சிங், அனாகத் சிங் மற்றும் ஜோஸ்னா சின்னப்பா வெற்றி பெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

மும்பையில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் அபய் சிங் — ஹாங்காங்கின் மேத்யூவை வென்றார்.

மகளிர் பிரிவில் அனாகத் சிங் — எகிப்தின் ஃபரிதா வாலி-தை வென்றார்.

மற்றொரு போட்டியில் ஜோஸ்னா சின்னப்பா — அயர்லாந்தின் பிலினை வென்று அடுத்த சுற்றுக்கு முன்னேறினார்.

<<<<<<END>>>>>